SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# பஞ்சாலை நெருக்கடி: முதலாளிக்கா? தொழிலாளிக்கா?





**உலகத்**
**தொழிலாளர்களே**
**ஒன்று சேருங்கள்!**

*முதல் பதிப்பு*
மே 1998

*வெளியீடு*
புதிய ஜனநாயகத் தொழிலாளர்
முன்னணி - சென்னை
தொழிலாளர் பிரச்சாரக் குழு
கோவை

*அச்சு:*
எழில் பிரிண்ட்ஸ்,
சென்னை - 600 024.

விலை: ரூ. 4/-

*தொடர்புக்கு:*

புதிய ஜனநாயகத்
தொழிலாளர் முன்னணி,
37, எஸ்.பி.எம்,
பள்ளிக்கூடத் தெரு,
கொரட்டூர்,
சென்னை - 600 050.

கு. ராசேந்திரன்,
(தொழிலாளர் பிரச்சாரக் குழு),
25-ஏ, மணல் தோட்டம்,
கணபதி,
கோவை - 6.

# பஞ்சாலை நெருக்கடி: முதலாளிக்கா? தொழிலாளிக்கா?

தென்னிந்தியாவின் 'மான்செஸ்டர்' என்றும் 'பஞ்சாலை' நகரம் என்றும் அழைக்கப்படுவது கோவை மாநகரம். இந்தப் புகழுக்கே காரணம் பஞ்சாலைகள்தான். ஆனால் இன்றோ இந்த பஞ்சாலைகள் கடும் தொழில் நெருக்கடியில் சிக்கியுள்ளன. இதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி வெளியே வீசப்பட்டு விட்டனர்; தொடர்ந்து வெளியேற்றப்பட்டும் வருகின்றனர். தீரமிக்க பல போராட்டங்களை நடத்திய கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள் (முதலாளிகள் - அரசு - தொழிற்சங்க புரோக்கர்களின் கூட்டுச் சதி காரணமாக) செய்வதறியாமல் திகைத்து நிற்கின்றனர்.

பஞ்சாலை நெருக்கடியால் நட்டமடைந்து தெருவுக்கு விரட்டப்பட்ட மில் முதலாளி ஒருவராவது உண்டா? கிடையவே கிடையாது. மாறாக அவர்களது சொத்து பல்கி பெருகிக் கொண்டே இருக்கிறது. உதாரணமாக சத்தி ரோட்டில் உள்ள இராமகிருஷ்ணா மில் முதலாளி பஞ்சாலையில் இருந்து கிடைத்த இலாபத்தைக் கொண்டு அக்ஷயா மில், இராமகிருட்டினா ஸ்டீல், மேலும் பல சிறு ஆலைகள் - கல்லூரி, மருத்துவமனை, திருமண மண்டபம், ஆடம்பர பங்களாக்கள் என்று அடுக்கடுக்காகச் சொத்துக்களை சேர்த்து கொண்டுள்ளார். இதே போல் இலட்சுமி மில் முதலாளியும் கொழுத்துள்ளார்.


எனவே பஞ்சாலை நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்கள் தொழிலாளர்கள் மட்டுமே. நெருக்கடியின் சுமையை தொழிலாளர்கள் மீதும் பருத்தி விவசாயிகள் மீதும் சுமத்திவிட்டு கொழுத்தவர்கள் தான் இந்த மில் முதலாளிகள். நெருக்கடி, நெருக்கடி என்று இவர்கள் குடம் குடமாக நீலிக்கண்ணீர் வடிப்பதெல்லாம் அவர்களின் இலாபக் குவிப்பிற்கு ஏற்படும் (மின்சார தட்டுப்பாடு, பஞ்சு விலையேற்றம் போன்ற) தற்காலிக நெருக்கடிகளைப் பற்றித்தான்! தாங்கள் நினைத்தபடி தொழிலாளர்களை வெளியேற்ற

முடியாத சிக்கல்களைப் பற்றித்தான்! ஏற்றுமதி பாதிக்கப்படும், அன்னிய செலவாணி ஈட்டல் குறைந்து விடும் என்ற இவர்களின் 'தேசபக்த' கரிசனமெல்லாம் சொந்த இலாபத்தைப் பற்றிய சுயநல கரிசனம் மட்டும்தான்.

கடந்த 1995-ஆம் ஆண்டு வரை பஞ்சாலைகளின் வளர்ச்சி பிரமிக்கதக்க அளவிலும் இலாபகரமாகவும் இருந்து வந்ததாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. அப்படியிருந்த தொழில் இன்று இப்படிப்பட்ட நெருக்கடிக்கு ஆளானக் காரணங்கள் என்ன?

இந்தியாவில் உள்ள தொழில்களில் பெருமையும் பாரம்பரியமும் வாய்ந்தது ஜவுளித்தொழில். ஏற்றுமதியின் மூலம் ஆண்டுக்கு சுமார் 35 ஆயிரம் கோடியை ஜவுளித்தொழில் ஈட்டித் தருகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதும் பஞ்சாலைத் தொழிலாகும், 1947-க்கு முன்பு சுமார் 423 பஞ்சாலைகள் மட்டுமே இருந்தன. ஆனால் தற்போது இந்தியாவில் சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பஞ்சாலைகள் உள்ளன. இந்தப்

**நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இப்பஞ்சாலைகள் தொடர்ந்து நீடிக்க முடியுமா?**



**பஞ்சாலை நெருக்கடியால் நட்டமடைந்து தெருவுக்கு விரட்டப்பட்ட மில் முதலாளி ஒருவராவது உண்டா? கிடையவே கிடையாது. நெருக்கடியின் சுமையை தொழிலாளர்கள் மீதும், பருத்தி விவசாயிகள் மீதும் சுமத்தி விட்டு கொழுத்தவர்கள்தான் இந்த மில் முதலாளிகள்.**

பஞ்சாலைகளின் மூலம் உற்பத்தியாகும் ஜவுளித்துணிகளின் ஏற்றுமதி 1996, 1997-ம் ஆண்டுகளில் ரூ. 34 ஆயிரம் கோடிக்கு வளர்ந்துள்ளது. இது இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 30 சதவிகிதம் ஆகும். இதில் 50 சதவிகிதம் தென்னிந்தியாவில் இருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.

தென்னிந்தியாவில் உள்ள தனியார் பஞ்சாலைகள் ஒன்று சேர்ந்து தென்னிந்திய மில்கள் சங்கத்தின் (சைமா) கீழ் இயங்கி வருகின்றன. சைமாவில் 382 பஞ்சாலைகள் உறுப்பினர்களாக உள்ளன. இதில் கோவை மாவட்டத்தில் மட்டும் 220 பஞ்சாலைகள் உள்ளன. ஆந்திராவில் 47 பஞ்சாலைகளில் 17741 தொழிலாளர்களும், கர்நாடகாவில் 17 பஞ்சாலைகளில் 13,894 தொழிலாளர்களும், கேரளாவில் 22 பஞ்சாலைகளில் 12254 தொழிலாளர்களும், பாண்டிச்சேரியில் ஏழு பஞ்சாலைகளில் 3257 தொழிலாளர்களும் தமிழ்நாட்டில் 1,19,026 தொழிலாளர்களும் வேலை செய்கின்றனர். இவற்றில் கோவை மாவட்டத்தில் மட்டும் 111 பஞ்சாலைகளில் 45,826 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இது தவிர சைமாவில் உறுப்பினராக இல்லாத பஞ்சாலைகள் தென்னிந்தியாவில் 907 பஞ்சாலைகள் உள்ளன. இவற்றில் சுமார் மூன்று இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

இந்தியாவிலிருந்து 1994-ஆம் ஆண்டு 21கோடியே 50இலட்சம் கிலோ கிராம் எடையுள்ள பருத்தி நூல் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு 2285 கோடியே பத்து இலட்சம் ரூபாய் ஆகும். இதில் கோவை மாவட்டத்தில் உள்ள மில்களில் இருந்து 6 கோடி கிலோ கிராம் எடையுள்ள பருத்தி நூல் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ.635 கோடி ஆகும். இது இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பருத்தி நூலில்

25%-க்கும் அதிகமாகும். 1996-97-ம் ஆண்டு இந்தியாவில் இருந்து ரூ. 5330 கோடியே 27 இலட்சத்திற்கு பருத்தி நூல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மனிதனின் நுகர்வு தேவை ஆண்டுக்கு சாதாரணமாக 50 சதுர மீட்டர் என எடுத்துக் கொண்டால் மொத்தமாக ஆண்டிற்கு ஏறத்தாழ 5000 கோடி சதுரமீட்டர் துணி தேவைப்படும். ஆனால் இந்தியாவின் துணி உற்பத்தியோ ஏறத்தாழ 2800 கோடி சதுர மீட்டர்கள் மட்டுமே. இதில் ஏற்றுமதி போக உள்நாட்டுத் தேவைக்கு பயன்படுவது இன்னும் குறைவே. எனவே உள்நாட்டு தேவையை ஈடுகட்டவே மேலும் பஞ்சாலைகள் பெருக வேண்டும்; அப்படியிருக்க பஞ்சாலைகள் மட்டும் அல்ல பருத்தி விவசாயிகளும் கூட நெருக்கடியில் சிக்கித் தவிப்பதேன்?

இதற்கு அதிர்ச்சியூட்டும் பல காரணங்கள் உள்ளன.

## பெரிய மில்களின் அவல நிலை

1950-களில் ஊக்கத்துடன் வளர்க்கப்பட்ட பெரிய துணிஆலைகள் 1960-களின் மத்தியில் வீழ்ச்சியடையத் துவங்கின. குறிப்பாக, 1970-லிருந்து 1986 வரையில் பெரிய துணிஆலைகள் பலப் பிரிவுகளாக உடைக்கப்பட்டு, தனித்தனி மையங்களாக நிறுவப்பட்டன. இந்நிலையில் பருத்தி (காட்டன்) துணி உற்பத்தியும் பின்னுக்குத் தள்ளப்பட்டு, செயற்கை இழை மற்றும் கலப்பு நூல்களில் தயாரிக்கப்படும் துணிகளின் உற்பத்தி முன்னுக்கு வந்தது. இதன் போக்கில் பருத்தி துணிகளது உற்பத்தி 0.72 சதவிகிதமாக குறைந்தது. (1980-81-ல் மட்டும்). அதே நேரத்தில் பருத்தி அல்லாத துணி வகை 15.41 சதவிகித அளவும், கலப்பு துணி வகை 12.65 சதவிகித அளவும் உற்பத்தியைப் பெருக்கின. இத்தகைய உற்பத்திக்கு ஏதுவாக பெரிய ஆலைகளை உடைத்து சிறிய, சிறிய விசைத்தறி மையங்களாக மாற்றும் போக்கு நிகழ்ந்தது. மேலும் கீழ்காணும் காரணங்களாலும் பெரிய ஆலைகள் செல்வாக்கு இழந்தன.

1. பெரிய ஆலைகளில் பெற்ற இலாபத்தை மீண்டும் மறு உற்பத்திக்காக, ஆலைகளை மேம்படுத்த பயன்படுத்தாமல் அதிக இலாபம் தரும் வேறு தொழில்களுக்கு மூலதனம் எடுத்துச் செல்லப்பட்டது.

குறிப்பாக நெசவுத் தொழிலில் கொள்ளை இலாபம் ஈட்டிய ரிலையன்ஸ் குரூப், மதுராகோட்ஸ், இலட்சுமி மில்ஸ், பின்னி, பி.எஸ்.ஜி. குரூப் போன்ற பெரிய நிறுவனங்கள் மோட்டார் வாகனம், ரியல் எஸ்டேட், மின்னணுத் துறை, போக்குவரத்து உள்ளிட்ட பல

துறைகளில் மூலதன மிட்டதால் தாய்த் தொழிலான நெசவுத் துறைகளை புறக்கணித்தனர்.

2. இலாபத்தை வேறு துறைகளில் மூலதனமிட்டதால் விஞ்ஞான வளர்ச்சிக்கும், நவீன உற்பத்தியின் தேவைக்கும் ஏற்ப இயந்திரங்களை நிறுவி, தாய் நிறுவனத்தை வளர்க்காததால் உற்பத்தி குறைந்தது.
3. காலாவதியாகிப் போன இயந்திரங்களையே பயன்படுத்தியதால், பராமரிப்பு செலவு அதிகரித்தது.
4. அதிக பராமரிப்பு செலவில் குறைந்த உற்பத்தியிலான முறை மேற்கொண்டதால் குறைந்த செலவில் உற்பத்தி செய்து வரும் விசைத்தறியாளர்களுடன் போட்டியிட முடியாமல் போனது.
5. அதிகப்படியான கதிர்களை (ஸ்பிண்டில்) வைத்து குறைந்த அளவே நூல்களை உற்பத்தி செய்ததால், உற்பத்தி செலவு அதிகரித்தது. இதனால் விசைத்தறிக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.
6. அதிகவரி, மின்கட்டணம் போன்ற சுமைகளை தாங்கமுடியாத நிலையிலும், நிர்வாக சீர்கேடுகள் காரணமாகவும் பெரிய ஆலைகள் கடனில் தத்தளிக்க ஆரம்பித்தன.

மேலும் பல்வேறுவித புறகாரணிகளால் பெரிய ஆலைகள் சீர்குலைந்து போயின. இதனையொட்டி 1970-களில் துவங்கி 1986 வரையிலும் இது நாட்டுஅளவில் நெசவு உற்பத்தியிலும், தொழிலாளர் அரங்கிலும் சர்ச்சைகளை ஏற்படுத்தின.

## தேசிய பஞ்சாலைக் கழகம் (NTC) உதயமாதல்

1970-களில் பாசிச இந்திராவுக்கு பலவிதமான அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்ட காலத்தில் நெசவுத் தொழிலில் ஏற்பட்ட நசிவும் அதனை ஒட்டி எழுந்த தொழிலாளர் பிரச்சினைகளும் தலைவலியை உண்டு பண்ணின. இந்த அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் விதமாக வங்கிகளை தேசியமயமாக்கல், 20 அம்சத்திட்டம், வறுமை ஒழிப்புத் திட்டம் போன்றவைகள் கொண்டு வரப்பட்டன. இதன் பின்னணியில் அரசியல் ஆதாயத்திற்காக நெசவுத்தொழிலில் ஏற்பட்ட பிரச்சினையைத் தீர்க்க தேசிய பஞ்சாலைக் கழகம் (NTC) உருவாக்கப்பட்டது. 1968-லிருந்து 1974 வரை நலிவடைந்த 124 தனியார் மில்களில் 109 மில்களை கையகப்படுத்தி என்.டி.சி. உருவாக்கப்பட்டது. நலிவடைந்த ஆலைகளுக்கு புத்துயிர் தருவதற்காக உருவாக்கப்பட்ட என்.டி.சி. இன்று அரசுக்கு பெரிய

சுமையாகி விட்டது. கையகப்படுத்தப்பட்ட 109 ஆலைகளிலும் முதலில் திட்டமிடுவதிலேயே குளறுபடி துவங்கி விட்டது. தனியார் துறைகள் தோல்வியுற்ற போது சமய சஞ்சீவியாக கருதப்பட்ட பொதுத் துறைகளைப் பற்றிய எதிர்பார்ப்பும் தோல்வியடைந்தது. நட்டக் கணக்குகள் அதிகரித்தது. இந்நிலையிலும் 1983-ல் மேலும் 13 ஆலைகள் தேசியமயமாக்கப்பட்டன. அதே நேரத்தில் அகமதாபாத்தில் 1984-ல் என்.டி.சி. ஆலைகள் மூடத் துவங்கின. தேசியமயமாக்கல் கொள்கையும் படிப்படியாக கை கழுவப்பட்டுக் கொண்டிருந்தன. என்.டி.சி. ஆலைகளில் ஏற்பட்ட நட்டங்களுக்கான காரணங்கள் வருமாறு:

மூடிய ஆலைத் திறக்கப்படுமா என்ற ஏக்கப் பெருமூச்சுடன் எதிர்ப்பார்க்கும் பஞ்சாலைத் தொழிலாளர்கள்.



1. நிர்வாகத் திறமையின்மை;
2. கச்சாப் பொருள் தட்டுப்பாடு; சரக்கு தேக்கம்;
3. மின் கட்டண பாக்கி;
4. தொழிலாளர்களது சம்பள பாக்கி செலுத்தப்படாதது;
5. அதிகாரிகளது இலஞ்ச ஊழல்கள்

உதாரணமாக கோவை முருகன் மில்லில் கூலித் தொழிலாளர்களது எண்ணிக்கையை அதிகமாகக்காட்டி 15 இலட்சத்திற்கும் மேலாக அதிகாரிகள் சுருட்டிக் கொண்டனர். அதே போல் கோவை ரங்க விலாஸ் மில்லில் தொழிலாளர்களது சம்பளம் ரூ. 7 இலட்சத்தை அதிகாரி திருடியது. மேலும் கோவை சாரதா மில்லில் 30,000 மீட்டர் துணிகள் காணாமல் போனதாக அறிவித்து அதிகாரி ஏப்பம் விட்டான்.

மேலும் என்.டி.சி.யில் அதிகாரிகள் அடிக்கின்றக் கொள்ளைக்கு அளவே இல்லை. அதாவது அனைத்து என்.டி.சி. ஆலைகளையும் நிர்வகிக்கும் தலைமையகம் கோவையிலுள்ளது. அனைத்து அலுவலக நாட்களிலும் கூட்டம் (Meeting) நடத்துகின்றனர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ரூ. 10000 வரை செலவு செய்கிறார்கள். உடையாத முந்திரிப் பருப்பும், திருநெல்வேலி அல்வாவையும் நிர்வாக செலவில் தினசரி விழுங்குகிறார்கள். இவ்வளவு செலவு செய்தும் இவர்கள் வேலை செய்வது என்னவோ அரைமணிநேரம் தான்! மீதி நேரமெல்லாம் வீண் அரட்டை!

இவர்களின் கேடுகெட்ட நிர்வாகத்தினால்தான் பலமில்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன. மில்லை நட்டப்படுத்திய இந்த 'மகாத்மாக்கள்' (உடல் நலம் பாதிக்கப்பட்டால்) மருத்துவம் பார்க்காமலே ஆயிரக்கணக்கான ரூபாயை மருத்துவச் செலவுக்காகச் சுருட்டி கொள்கிறார்கள். இவ்விசயத்தில் அனைத்து அதிகாரிகளும் ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகள் தான்.

இந்த 'உத்தம புத்திரர்கள்' தான் தொழிலாளர்களுக்கு சிக்கனத்தையும், சட்டத்தையும் போதிக்கிறார்கள். ஆனால் இவர்கள் மட்டும் தாங்கள் வாங்கும் சம்பளம் - கமிசனிலிருந்து ஒரு பைசாக் கூட குறைத்துக் கொள்ளமாட்டார்கள். மேலும் 'முருகன்மில் பொதுமேலாளர் ரங்கநாதனை போல் கோடிக்கணக்கில் கொள்ளையடித்து, அதில் தனியாக ஒரு மில்லையும் கட்டிக் கொள்வார்கள்'. இவை அனைத்தும் தொழிலாளர்களின் தலையில் தான் வந்து விடிகிறது. ஆனால் மக்களின் சொத்தைக் கொள்ளையடித்த அதிகாரிகள் முதலாளி ஆகி விடுகிறார்கள்.

இச்சூழலில் என்.டி.சி. கீழ்காணும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

1. பெரிய ஆலைகள் சிதைக்கப்பட்டு, சிறிய, சிறிய விசைத்தறிகளாக மாற்றப்பட வேண்டிய நெருக்கடி.
2. வேலை வாய்ப்பை பாதுகாக்க வேண்டியநிலை.
3. பொருளாதார ரீதியில் நட்டமடைவதை தடுப்பது.
4. அதிநவீன ஜவுளிரகங்களை உருவாக்கிப் போட்டியை சமாளிக்க வேண்டிய நிலை.

இந்நிலையில் என்.டி.சி.யின் 9 மண்டலங்களில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி மண்டலங்கள் தவிர ஏனையவைகளது வளர்ச்சியானது மிகவும் பின் தங்கி இருந்தது. இதற்கு தமிழ்நாட்டில் கோவை, சேலம் பகுதிகளில் நல்ல சந்தை இருந்தது. அதனால்தான் இலாபமும் கிடைத்தது. 1992-93-ல் மொத்த விற்பனையில் 82 சதவிகிதம் தமிழ்நாடும், 4 சதவிகிதம் குஜராத்தும் தந்தன. மேலும் நெய்தலில் (Weaving) விசைத்தறியுடன் போட்டியிட முடியாததால் என்.டி.சி.யானது செல்லாக்காசாகி விட்டது. இதை சரி செய்யாவிட்டால் என்.டி.சி.யை மேம்படுத்த இயலாது என்பதை அரசு உணரவில்லை. இதனால் 1980-ல் 56 சதவிகிதம் உற்பத்தியானது இன்று 25 சதவிகிதம் ஆக குறைந்து விட்டது.

## என்.டி.சி.யை சீர் செய்ய அரசின் திட்டமும் அதன் பலனும்

என்.டி.சி.யை புனரமைக்க பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இதன் துவக்கமாய் 1994-ல் முத்தரப்புக் கமிட்டி அமைக்கப்பட்டது. அக்கமிட்டியின் பரிந்துரைகள் வருமாறு:

1. நூற்பு மற்றும் நெசவில் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.
2. இதை நிறைவேற்ற ஆலையின் உபரி நிலங்களை விற்று பயன்படுத்த வேண்டும்.
3. குறைந்த பட்சம் நூற்பாலை மட்டுமாவது நவீனப்படுத்தப்பட வேண்டும்.

இத்திட்டத்தை மத்தியஅரசு நிராகரித்தது. தொழிலாளர்களின் தொடர்ச்சியானப் போராட்டத்தின் காரணமாக மீண்டும்ஒரு திட்டத்தை அரசு முன்வைத்தது.

1. இத்திட்டத்தின்படி ரூ. 2005 கோடி ஒதுக்கப்படும்.
2. ரூ. 1,500 கோடிக்கு இயந்திரங்களை கடனில் வாங்குவது. இத்திட்டத்தின்படி ஒருசில ஆலைகள் புனரமைக்கப்பட்டன. எஞ்சியவைகள் மூடப்பட்டன.

மேலும் ஒரு திட்டத்தின் மூலம் ரூ. 532/- கோடியை நவீனப்படுத்தவதற்காக உடனடியாக ஒதுக்குவதுஎனவும், தொழிலாளர்களை விருப்ப ஓய்வில் (VRS) மூலம் வீட்டுக்கு அனுப்ப ரூ. 585 கோடியை ஒதுக்குவது எனவும் அறிவிக்கப்பட்டது. இதுவும் பி.ஐ.எப்.ஆர் (BIFR) -இன் அனுமதி கிடைக்காததால் கைவிடப்பட்டது.

புனரமைப்பு திட்டம் முழுமையாக வெற்றிபெறாதநிலையில் அன்றைய மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப் பட்டு அரசுக்கு ஆலோசனைகள் வைத்தும் பயனில்லாமல் போனது. ஒட்டுமொத்தமாக புனரமைப்புத் திட்டங்கள் அனைத்தும் தோல்வி அடைந் தன. இந்நிலையில் என்.டி.சி. ஆலைகள் நூலிழை மற்றும் துணி உற்பத்தி தொடர்ந்து சரிவை நோக்கிச் சென்றுகொண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாய் மின்விசைத்தறிகள் உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தத் துவங்கிவிட்டன.

## என்.டி.சி.யில் தொழிலாளர் நிலை

1,35,000 தொழிலாளர்கள் இருந்த நிலை மாறி இன்று மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்பட்டுள்ளது. கட்டாய ஓய்வுத் திட்டம் கைவிடப்பட்டா லும் நிலவும் புற நிலைமைகள் விருப்ப ஓய்வுக்கு (VRS) தொழிலாளியை உந்தித் தள்ளுகின்றன. 1993 ஏப்ரல் வரை சுமார் 30,000 தொழிலாளர்கள் விருப்ப ஓய்வில் சென்று விட்டனர். தற்போதும் விருப்ப ஓய்வுத் திட்டம் என்டிசி மில்களில் நடைமுறையில் இருக்கிறது. இதற்கு விருப்ப ஓய்வுத் தொகையாக (Gradufy) வருடத்திற்கு 39 நாட்கள் சம்பளத்தைக் கூடுதலாக தருகிறார்கள். இதன் மூலம் கடந்த மூன்று வருடங்களில் சி.எஸ்.டபுள்யூ என்ற மில்லிருந்து சுமார் 900 தொழிலாளிகள் வெளியேறி விட்டனர். இந்த VRS தொகையைக்கூட என்டிசி நிர்வாகம் தவணை முறையில் தான் தொழிலாளர்களுக்கு வழங்குகிறது. ரூ. 2500 கோடிக்கு மேல் கடன் உள்ள என்.டி.சி.யில் தொழிலாளர்கட்கு தரவேண்டிய ஊதிய உயர்வு ஆண்டு கணக்கில் நிலுவையில் உள்ளது. ஊதியப் பற்றாக்குறைக் காரணமாக நிறுவனத்தின் மீது அக்கறைக் குறைவும், வெறுப்புமே தொழிலாளர்களுக்கு எஞ்சி உள்ளது.

ஆலைக்கடனும், சம்பளப்பாக்கியும், ஆலையை சீரமைக்க நிதிப் பற்றாக்குறையும் சுற்றிவளைத்து நெருக்குகின்ற சூழலிலிருந்து என்.டி.சி. ஆலைகளை மீட்டெடுக்க இந்த அரசிடம் உள்ள திட்டங்கள் தான் என்ன?

## அரசின் மோசடித் திட்டங்கள்

நாட்டில் என்.டி.சி. ஆலைகள் உட்பட 300க்கும் மேற்பட்ட நலிவடைந்த நெசவு ஆலைகள் உள்ளன. இவற்றை அரசே ஏற்றுநடத்துவது என்ற வழிமுறை தோல்விமயமானதை என்.டி.சி.யின் வரலாறு காட்டுகிறது. இந்நிலையில் நலிவடைந்த ஆலைகளைப் புனரமைக்கவும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களது வேலை வாய்ப்பை பாதுகாக்கவும் அரசு முன் வைக்கும் மோசடியான திட்டங்கள்:

1. ஆலைகளை நகரின் மையப்பகுதியிலிருந்து புறநகர் பகுதிக்கு மாற்றி இயக்குவதற்கு ஆகும் செலவைக் குறைப்பது.
2. நகரின் மையப் பகுதியில் உள்ள நிலங்களை விற்று மூன்றுபங்காகப் பிரித்து நகராட்சி, வீட்டு வசதி வாரியம், மற்றும் ஆலை அதிபர்கட்கு தர வேண்டும்.

இவ்விரண்டு முக்கிய மாற்றுதிட்டங்களும் மோசடியானவை. சென்னை பின்னி ஆலையைக் கைப்பற்றிய சாராய உடையார், 110 ஏக்கர் நிலத்தை ரியல்எஸ்டேட் ஆக மாற்றிக் கொள்ளை அடிக்க எத்தணிப்பதைப் போல, மா∴பியாக்களின் நகரமான மும்பையில் அருண் காவ்லி போன்ற குண்டர்கள் உதவியோடு கட்டாவ் மில்ஸ் போன்ற நிறுவனங்கள் செய்கின்றன. அரசு அறிவிக்கும் மாற்றுத் திட்டமான புறநகருக்கு மாற்றும் திட்டத்தை பின்னி ஆலையில் சாராய உடையாரும் முன் வைத்தார். புவனகிரி பகுதிக்கு மாற்ற முயன்றதைப் போலவே மும்பை நகரில் உள்ள 58 நலிவடைந்த

**என்.டி.சி. அதிகாரிகள் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ரூ. 10,000 வரை செலவு செய்கிறார்கள். உடையாத முந்திரிப் பருப்பும், திருநெல்வேலி அல்வாவையும்நிர்வாகச் செலவில் தினசரி விழுங்குகிறார்கள்.**

ஆலைமுதலாளிகளும் முயல்கின்றனர். தொழிலாளர்களது எதிர்ப்பால் சிலர் பின்வாங்கி உள்ளனர்.

மும்பை போன்ற பெருநகரங்களில் உள்ள பலஏக்கர் ஆலை நிலங்களது மதிப்பு அபரிமிதமானது. மும்பையில் உள்ள ஆலை நிலங்களின் சொத்துமதிப்பு மட்டும் ரூ.20,000 கோடியை தாண்டிவிட்டது. இதனடிப்படையில் ஆலைகளை வெளியேற்றிவிட்டால் கொள்ளை இலாபம் கிடைக்கும். நட்டமடைந்த ஆலைகளை மாற்றுவதை விட நிலத்தை விற்பதே நலன் என்று ஆலை முதலாளிகள் நினைக்கின்றனர். இதற்கு ஆலைகள் நிதி மற்றும் புனரமைப்பு நிறுவனம் (BIFR) உடந்தையாக உள்ளது. அதற்காக பரிந்துரையும் செய்கிறது. ஆலை நிலத்தை விற்று கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்க நினைக்கும் ஆலை முதலாளிகளது போக்கு ஆயிரக்கணக்கானத் தொழிலாளர்களது வாழ்வைப்பறிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மும்பையை விட்டு வெளிப்பகுதிக்கு ஆலையை மாற்றினாலும் தொழிலாளிக்கு பயனற்றதாக இருப்பதால், ஆலைகளை மாற்றுவதையும், ஆலைகளின் நிலத்தை விற்பதையும் எதிர்த்து தொழிலாளர்கள் கடுமையாகப் போராடி வருகின்றனர். தொழிலாளர்களது போராட்டங்களை மா∴பியா குண்டர்களை வைத்து முதலாளிகள் ஒடுக்கினாலும், அதையும் மீறி தொழிலாளர்கள் போராடி வருகின்றனர். கிர்னி காம்கார் தொழிற்சங்கத்தின் தலைவர் தத்தா சமந்த் போன்றோர் போர்க் குணத்துடன் போராடி ஆலை மூடலை தடுத்து வந்தனர். இதனால் பல தொழிற்சங்கத் தலைவர்கள் பலியாக்கப்பட்டும் உள்ளனர். இருப்பினும் ஆலை நிலத்தை விற்றல், மாற்றுதல் போன்றவற்றை எதிர்த்து தொடர்ந்து போராடியும் வருகின்றனர்.

ஆலை நிலத்தை விற்பது பற்றிய 'அரிய' கோட்பாட்டை முன் வைத்து, மா∴பியா குண்டர்கள் மூலம் ஆலை நிலங்களை விற்று கொள்ளையடிப்பதில் மகாராட்டிரா மாநிலம் முன்னணியில் உள்ளது. முன்னர் ஆண்ட காங்கிரசு கும்பலும், தற்போது ஆளும் பா.ஜ.க./சிவசேனை கூட்டணியும் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல. குறிப்பாக இதில் பா.ஜ.க./சிவசேனை அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதை நிறைவேற்ற பெயரளவுக்கு ஒரு கமிட்டியை (கொரியா கமிட்டி) கட்டியமைத்து உள்ளனர். இக்கமிட்டியினர் நெசவுத் தொழிலாளர் வாழ்நிலை பற்றியோ, வேலையைப் பற்றியோ எவ்வித கருத்தும் கூறவில்லை. மாறாக ஆலை அதிபர்களது நலன்கள் நிலவியாபாரம் பற்றி மட்டுமே கருத்துக் கூறியுள்ளனர். இவர்கள் அமைத்துள்ள கமிட்டியின் இலட்சணத்திலிருந்து அரசின்திட்டங்கள் அனைத்தும் மோசடித் திட்டங்கள் தான் என்பதை நிரூபித்து விட்டார்கள்.

## நெசவுத் துறையின் நெருக்கடிக்கு அடிப்படைக் காரணம் என்ன?

ஓர் ஆண்டில் இந்தியாவின் மொத்த துணி உற்பத்தி 27975 மில்லியன் சதுர மீட்டர்கள். அதே நேரத்தில் நாட்டின் தனிநபர் துணிநுகர்வாக கணக்கிடும்போது 14-40 மீட்டரே இருந்ததாக மத்திய அரசின் புள்ளி விவரம் கூறுகிறது. இப்புள்ளி விவரம் இந்திய மக்கள் தொகையை 102.22 கோடி என கணக்கிட்டு, அதனடிப்படையில் தரப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 102.22 கோடி மக்கள் தலா 14.40 மீட்டர் துணியைப் பயன்படுத்தி இருப்பதனடிப்படையில் செலவாகி இருக்கக்கூடிய துணியின் அளவு (உள்நாட்டு நுகர்வு) 102.22 x 14.40 = 14720 மில்லியன் சதுர மீட்டர்.

ஆக மொத்தம் உற்பத்தியான 27975 மில்லியன் சதுரமீட்டரில் உள்நாட்டு தேவை போக மீதமுள்ள 13,255 மில்லியன் சதுர மீட்டர் உள்நாட்டில் தேங்கியுள்ளது. ஆனால் மக்களின் தேவையே தலைக்கு 16 மீட்டர் தேவையென அரசு கணக்கிட்டுள்ளது. மேலும் கடந்த 10 ஆண்டுகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால் மக்களது துணி நுகர்வு 2 சதவிகிதத்துக்கும் கீழே குறைந்துள்ளது. இத்துடன் மத்தியஅரசின் மற்றொருப் புள்ளி விவரப்படி நாட்டில் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள 35கோடி மக்கள் ஆண்டுக்கு 2 மீட்டர் துணியையே பெறுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, நாட்டின் மொத்த துணி உற்பத்தியில் பாதியளவு வாங்கப்படாமல் உள்ளது என்பதை மறுக்க முடியாது. அப்படியென்றால் ஏன் இந்த அவல நிலை? இதற்கு யார் காரணம்? நமது நாடு பெரும்பான்மையாக விவசாயிகளைக் கொண்ட நாடு. விவசாயத்திலுள்ள உடைமை உறவுகள் பழைய நிலப்பிரபுத்துவ பாணியில்தான் பெரும்பாலும் உள்ளன. உற்பத்தியைப் பெருக்க புகுத்தப்பட்ட பசுமைப் புரட்சி உட்பட நவீனத் திட்டங்கள் அனைத்தும் பெரும் நிலப்பிரபுக்கள், விதை, உரம், பூச்சு மருந்து - டிராக்டர் உற்பத்தி செய்யும் தரகுப் பெருமுதலாளிகள் மற்றும் ஏகாதிபத்திய முதலாளிகளின் நலன்களுக்கே சேவை செய்து வருகின்றன. இதனால் நாட்டின் மக்கள் தொகையில் பாதிக்குமேலுள்ள கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகள் தொடர்ந்து ஏழ்மையாகிக் கொண்டே வருகின்றனர்.

இன்னொரு பக்கம் நமது தொழில்துறையானது அந்நிய வல்லரசுகள் மற்றும் அவர்களது அடிவருடிகளான டாட்டா, பிர்லா போன்ற தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் ஆதிக்கத்தில் உள்ளது; இவர்களின் இலாபவெறிக்கே உற்பத்தி திட்டமிடப்படுகிறது. இதனால் நமது நாட்டு செல்வம் வல்லரசுகளால் உறிஞ்சப்படுவதோடு, தொழிலாளர்கள் வேலை

யின்றி விரட்டப்படுகின்றனர்; புதிய வேலை வாய்ப்புகள் பெருகுவதும் குறைவான விகிதத்தில் உள்ளது.

மேற்கண்ட காரணங்களால், இந்தியாவின் மக்கள் தொகையில் 70 - 80 சதவிகிதத்தினர் மேலும் மேலும் வறுமை நிலைமைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர். இதனால் வாங்கும் சக்தி குறைந்து கொண்டே போகிறது. இதுதான் பஞ்சாலை நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமாகும். ஏற்கனவே முன் தலைப்புகளில் விவரிக்கப்பட்ட பிற காரணங்களும் நெருக்கடியை தீவிரமாக்கி வருகின்றன. 1991-இல் ராவ்-மன்மோகன்சிங் கும்பலால் புகுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை 'எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவது போல்' பஞ்சாலை நெருக்கடியை மேலும் தீவிரமாக்கி விட்டது. அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான், ரசியா ஆகிய மேல்நிலை வல்லரசுகளின் அடக்குமுறைக் கருவிகளை உலகவர்த்தகக்கழகம், ஐ.எம்.எப். உலக வங்கி என்ற மூன்று நிறுவனங்களால் புதிய பொருளாதாரக் கொள்கை நமது நாட்டின் மீது திணிக்கப்பட்டுள்ளது.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கூறுகளைக் கொண்ட இப்புதிய பொருளாதாரக் கொள்கையின்படி நமது நாட்டு விவசாயமும், தொழிலும் ஏகாதிபத்தியங்களின் மேலும் கூடுதலானக் கொள்ளைக்கு திறந்து விடப்பட்டுள்ளன. நமது நாட்டின் ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கை, உற்பத்தி, பட்ஜெட் வரிக்கொள்கை, தொழிலாளர் கொள்கை அனைத்தும் வல்லரசுகளின் நலன்களுக்கேற்ப புதிய முறையில் வடிவமைக் கப்பட்டு வருகின்றன. புதிய சர்வதேச உழைப்புப் பிரிவினை, மூலதன, விநியோக கொள்கைகளின்படி உலக நாடுகள் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தியா உட்பட பின்தங்கிய ஏழை நாடுகள் வல்லரசுகளுக்கு, மறுகாலனியாக்கப்பட்டு வருகின்றன. அந்நிய செலவாணி ஈட்டுவதற்காக எதையும் தாரை வார்க்கலாம் என்பதே தாரக மந்திரமாக ஆக்கப்பட்டு உள்ளது.

மேற்குறிப்பிட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் பின்னணியின் நெசவுத் தொழிலின் நெருக்கடியைப் பார்க்க வேண்டும். 80 விழுக்காடு மக்களின் வாங்கும்சக்தி குறைந்து கொண்டே போவதால், மக்களின் துணித் தேவையும் குறைகிறது. சராசரியாக 14 மீட்டர் துணியை மக்கள் வாங்குகிறார்கள் என்று அரசே தெரிவித்துள்ளது. ஆனால் சராசரியாக 50 மீட்டராவது தேவைப்படும் என்பதே எதார்த்த நிலை. மக்களின் வாங்கும் சக்தியை அதிகரித்து நெருக்கடியை தீர்ப்பதற்கு பதில் ஆலை முதலாளிகளின் இலாபம், அந்நிய செலவாணி ஈட்டுவது என்ற நோக்கங்க ளுக்கு நெசவுத் துறை பலிகடா ஆக்கப்பட்டுவிட்டது.

உள்நாட்டு மக்கள் - நாட்டு நலன் என்ற அடிப்படையில் பஞ்சு உற்பத்தி, நூல் உற்பத்தி, துணி உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி கொள்கை ஆகியவைகளை பற்றி ஒருங்கிணைந்த திட்டம் இல்லை. மாறாக புதிய பொருளாதாரக் கொள்கையின்படி பஞ்சு, நூல், துணி ஆகியவற்றின் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி தனிதனியாகப் பிரிக்கப்பட்டு அந்நிய, உள்நாட்டு முதலாளிகளின் இலாபக் குவிப்பிற்கு வசதியாக கையாளப்படுகிறது. இவற்றின் விளைவாக பருத்தி விவசாயிகள் போண்டியாகி குடும்பம் குடும்பமாக தற்கொலை செய்து கொள்கிறார்கள். இன்னொரு பக்கம் கைத்தறி, விசைத்தறி, பெரிய ஜவுளி ஆலைத் தொழிலாளிகள் இலட்சக்கணக்கில் வேலையின்றி வீதியில் வீசப்பட்டு வருகின்றனர்.

ஏற்றுமதிக்கான உற்பத்தி என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையானது இந்நாட்டின் அனைத்து உயிராதாரங்களையும் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து அந்நியசெலாவணி ஈட்டுவதற்காக உள்நாட்டின் தேவையைப் புறக்கணித்து வரும் ஆளும்வர்க்கங்கள் நாட்டுப் பற்று அற்றவர்கள ...டந்து கொள்வதையும் பார்க்கலாம். உதாரணமாக, நெசவுத் தொழிலுக்கு உயிராதாரமானது சிட்டாநூல். இது பருத்தியிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இந்த பருத்தி . உற்பத்தி 1-60 கோடி பேல்கள். இதில் 1996-97-ல் 5 இலட்சம் பேல்கள் உற்பத்தி குறைந்தது. ஆக 96-97ல் மொத்த உற்பத்தி 1-55 கோடி பேல்கள் மட்டுமே. உள்நாட்டுத் தேவையோ 1-575 கோடி ஆக பற்றாக்குறையானது சுமார் 2,50,000 பேல்கள். இந்நிலையில் இந்திய அரசு ஏற்கனவே ஏற்றுமதிக்காக அனுமதித்ததை விட தற்போது கூடுதலாக 4,50,000 பேல்கள் பருத்தியை ஏற்றுமதி செய்ய அனுமதித்துள்ளது. இது எப்படிப்பட்ட கொடுமையான செயல் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்! இதன் காரணமாய் உள்நாட்டு தேவைக்கு நூல் பற்றாக்குறை ஏற்பட்டு விலை அதிகரிக்கிறது. பின்னர் பற்றாக்குறையை சரி செய்ய வெளிநாடுகளிலிருந்து பருத்தி இறக்குமதி செய்யப்படுகிறது. வெண்ணெய்யை ஏற்றுமதி செய்துவிட்டு நெய்யை இறக்குமதி செய்யும் சூரப்புலிகள் தான் நமது ஆட்சியாளர்கள்!

அடுத்ததாக நெசவிற்குப் பயன்படுத்தப்படும் நூலின் தயாரிப்பு மற்றும் உள்நாட்டில் அது பயன்படுத்தப்படுவது பற்றி பார்க்கலாம்.

1996-97-ல் 366.67 மில்லியன் கிலோ நூல் ஏற்றுமதி செய்யப்பட்டு ரூ. 4341 கோடி அந்நிய செலாவணி ஈட்டப்பட்டது. நடப்பு ஆண்டில் அது 400 மில்லியன் கிலோவை தாண்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரத்தில் உலகஅரங்கில் 1980-ல் 50 சதவிகிதம் இருந்த பருத்தி நூலிழை உபயோகம் 1995-ல் 45 சதவிகிதமாகக் குறைந்து விட்டதுடன்,



வறுமையில் 'கிட்னி'யை விற்ற —— நெசவுத் தொழிலாளர்கள்

இனியும் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது சர்வதேச சந்தையில் பருத்தி நூலிழை உபயோகம் குறையத் தொடங்கி விட்டாலும், இந்திய முதலாளிகள் உள்நாட்டு சந்தையை விட சர்வதேச சந்தையையே விரும்புகின்றனர். இந்த நிலையில் நூலிழை ஏற்றுமதியில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, சில நிறுவனங்களுக்கு 100 சதவிகிதம் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்நியன் காலைநக்கும் களவாணிகளான தேசத்துரோகக்கும்பலுக்கு 100 சதவிகிதம் கதவைத் திறந்தால் எப்படி இருக்கும்? எல்லாம் ஏற்றுமதிக்குத் தான். கண் துடைப்புக்காக 5 சதவிகித நூல்களை உள்நாட்டில் வைத்து விட்டு மீதி 95 சதவிகித நூலை ஏற்றுமதி செய்யும் இக்கும்பலால், தட்டுப்பாடும், விலை உயர்வும் ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் நூல் விலை உயர்வு கைத்தறி, விசைத்தறி தொழிலாளர்களையும் மாஸ்டர் நெசவாளிகளையும் விசைத்தறி தேசிய முதலாளிகளையும் ஒருங்கே பாதிக்க
ஆலைகளிலும் நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டு தொழிலா
இழக்கிறார்கள். மில்கள் நட்டப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் நெசவுத் தொழிலிருந்து மட்டுமே பெறப்பட்டவை. புதிய பொருளாதாரக் கொள்கையை கடைபிடிக்கத் தவறுபவர்களுக்கு பொருளாதாரத் தடை என்னும் அபாயமும் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னால் ''காக்ரா'' என்னும் குட்டைப் பாவாடை அமெரிக்க அரசால் திட்டமிட்டு தடை செய்யப்பட்டதும், அவர்களது மிரட்டலுக்கு பணிந்த பின்னரே மேற்குறித்த துணியை அமெரிக்காவில் விற்க அனுமதித்தையும் அனுபவமாக எடுத்துக் கொள்ளலாம்.

## புதிய பொருளாதாரக் கொள்கையும் இந்திய தொழிற்சங்கங்களும்

புதிய பொருளாதாரக் கொள்கையானது நிலைமையை தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளது. 1947-க்கு முன்பிருந்த சமூக, அரசியல், பொருளாதார நிலைமையை மீண்டும் அரங்கிற்கு கொண்டு வந்துள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதாக சொல்பவர்கள் வெறுமனே பொருளாதாரவாதக் கண்ணோட்டத்திலும் தொழிற்சங்க வாதத்தின் அடிப்படையிலுமே பேசுகின்றனர். இது அரசியல் போராட்டத்தை நீர்த்து போகவே செய்யும்.

1947-க்கு முன்பிருந்த நிலைமையில் இந்திய உழைக்கும்மக்கள் இரண்டு எதிரிகளை எதிர்கொண்டு போராடினர். ஒன்று ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தையும் மற்றொன்று அதன் தரகர்களான உள்நாட்டு முதலாளிகளையும், நிலப்பிரபுக்களையும் எதிர்த்துப் போராடினர். அப்போது இந்திய தொழிலாளர்கள் நடத்திய மாபெரும் போராட்டங்கள் அனைத்தும் சிறப்பானவை. இப்போராட்டத்திலும் நெசவுத்தொழிலாளர்களே முன்னுதாரணமாக திகழ்ந்தனர்.

ஆசியாவிலேயே முதல் தொழிற்சங்கமான சென்னைத் தொழிலாளர் சங்கத்தை (MLU) உருவாக்கியவர்கள் ஆலைத் தொழிலாளர்களே. இந்தியாவில் 1908-ல் முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி ஆங்கிலேய ஆட்சியாளர்களை கலங்க வைத்தவர்கள் பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர்கள்தான்! வீரம் செறிந்தப் போராட்டங்களில் 1947-க்கு முன்னால் முத்திரை பதித்த நெசவுத் தொழிலாளர்களை வரலாற்று அரங்கம் மீண்டும் முன்னணிக்கு அழைக்கிறது.

1947-க்கு வெள்ளையனை எதிர்க்க வேண்டும் அந்நியன் கொள்ளையை தடுக்க வேண்டும் என்கிற உத்வேகம் இந்தியத் தொழிலாளர்களை அரசியல் அரங்கில் அணிதிரட்டியது. அரசியல் விடுதலையை சூத்திரமாக

வைத்து அலைஅலையாய் அணிதிரண்டனர் தொழிலாளர்கள். தொழிலாளர் கள் பங்கேற்காத அரசியல் கிளர்ச்சிகள் எதுவுமே 1947-க்கு முன்பு இந்திய வரலாற்றில் இருந்தது இல்லை.

ஆனால் இன்று 'சுதந்திரத்தின்' பொன் விழாவில் எவ்வாறு உள்ளது. 1947-ல் உடல் அளவில் வெள்ளையன் வெளியேறினான். இருப்பினும் அவனது 'ஆத்மா' மட்டும் இங்கேயே தான் சுற்றி வருகிறது. இன்று வெள்ளையன் மட்டுமல்ல. பல்வேறு அந்நியக் கொள்ளையர்களும், உள்ளூர் தரகர்களும் புதிய பொருளாதாரக் கூட்டணியை அமைத்து நம்முன் நிற்கின்றனர். ஆனால் வீரமிக்க தொழிலாளர் வர்க்கமோ பிளவுபட்டு நிற்கிறது. சாதி, மத, இன, மொழி ரீதியாக பல்வேறு கூறுகளாக பிளவுபட்டும், எஞ்சிய பிரிவுகள் தொழில்ரீதியாக பிளவுபட்டும் நிற்கிறது. வெள்ளையனின் நேரடி அடிமையாக இருந்த போது சுதந்திர வேட்கையின் காரணமாக அரசியல் உணர்வு பொங்கியது. ஆனால் இப்போது அமெ ரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, ரசியா ஆகிய வல்லரசுகளின் பினாமிகளிடம் ஆட்சி இருக்கும் போது "நம்ம ஆளுதானே ஆளுகிறான்! நமக்கு தேவையான சலுகைகளைக் கேட்டால் கொடுத்து விடுவான்" என்ற மாயை நமது அரசியல் உணர்வை காயடித்து விட்டது. இதனால் அரசியல் உரிமையை இழந்தோம். வெறும் கூலிக்காகவும், போனசுக்காகவும் கையேந் துகிறோம். இந்த 'கையேந்தும்' போராட்டங்களையே இலட்சியப் போராட் டமாக சித்தரித்து தொழிலாளர்களது சிந்தனையை மழுங்கடிக்கும் வேலையை கச்சிதமாக செய்கின்றன இன்றைய மஞ்சள் தொழிற்சங்கங்கள்.

அரசியல் கட்சிகளைச் சாராத தொழிற்சங்கங்கள் கூட குறைந்தபட்சம் மாற்று திட்டத்தை வைத்து போராடி அதை நடைமுறைப்படுத்தி வெற்றியும் பெற்று வருகின்றனர். நலிவடைந்த ஆலைகளை ஏற்றுநடத்தும்படி அரசிடம் கையேந்தும் அவல நிலைக்கு முற்றுப் புள்ளி வைத்தனர். ஆலை முதலாளிகளால் கைவிடப்பட்ட பல்வேறு ஆலைகளை, 1985-ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தைப் பயன்படுத்தி தொழிலாளர் கூட்டுறவு அமைப் பின் கீழ் கொண்டு வந்து, தொடர்ந்து நடத்தியும் வருகின்றனர். இதில் காமானி டியூப்ஸ், நியு சென்ட்ரல்; ஜீட்ஸ் டில்ஸ், கமாண்ட் மெட்டல்ஸ் அண்ட் அலாய்ஸ், ஹெஸ் வாட்ச் கம்பெனி, இடது கம்யூனிஸ்ட் போலிகள் ஆளும் கல்கத்தாவிலும் 20-க்கும் மேற்பட்ட சிறிய நடுத்தர ஆலைகள், அசாம், திரிபுரா மாநிலங்களில் பல்வேறு தேயிலைத்தோட்டங்களும் அடங்கும்.

'சுரண்டலை அடிப்படையாக கொண்டு இயங்கி வரும் இன்றைய சமுதாயத்தில் மேற்கொண்ட நடைமுறை தொடர்ந்து நீடிப்பது என்பது

இயலாத காரியம்தான். 'கரையான் புற்றெடுக்க கருநாகம் குடி கொண்டது போல' ஆளும் வர்க்கம் தனது வஞ்சக வலையில் வீழ்த்துவதற்கான சதியை தொடர்ந்து மேற்கொண்டு வரும் என்பதிலும் எவ்வித சந்தேகமும் இல்லை. இருப்பினும் இந்த குறைந்தபட்சத் திட்டத்தைக் கூட நடைமுறைப்ப டுத்துவதற்கு போராட இப்போலிகளுக்கு, இங்குள்ள தொழிற்சங்கங்களுக்கு வக்கில்லை என்பதுதானே உண்மை.

## தொழிலாளர்கள் மீது அதிகரித்து வரும் சுரண்டலும் ஒடுக்குமுறையும்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசு ஊழியர்கள், சிமெண்ட், சர்க்கரை, எந்திர ஆலைத் தொழிலாளிகளை விட பஞ்சாலைத் தொழிலாளர் கள்தான் மிகவும் அமைப்புரீதியாகத் திரண்டு வர்க்க உணர்வுடன் போராடக் கூடியவர்களாக இருந்தனர். கூடுதல் சம்பளம் கூடுதல் உரிமைகள் பெற்றிருந்தனர். ஆனால் இன்றோ அவர்கள் போராடிப் பெற்ற உரிமைகள் பலவும் அவர்களிடமிருந்து ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றது.



**மா∴பியா குண்டர்கள் மூலம் ஐவுளி ஆலை நிலங்களை விற்று கொள்ளையடிப்பதில் மகாராட்டிரா மாநிலத்தை ஆளும் பிஜேபி - சிவசேனை கூட்டணி அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.**

கூடுதல் வேலைப்பளுவைச் சுமத்துவதோடு; ஒடுக்கு முறையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தபடுகின்றது. 58 வயது வரை வேலை செய்ய முடியாத அளவுக்கு வேலைப்பளு கடுமையாக உள்ளது.

— நோய் காரணமாகவோ, திருமணம் போன்ற விசேசம் காரணமாகவோ கடன் வாங்கிவிட்டால் மீண்டும் ஈடேற முடியாத நிலையில் தான் தொழிலாளிகள் உள்ளனர். ஏறத்தாழ எல்லா தொழிலாளர்களும் வருங்கால வைப்பு நிதியை கடனாகப் பெற்று செலவழித்து விட்டனர்.

— பெரும்பாலான தொழிலாளர்கள் கந்து வட்டி கடனில் சிக்க மீள முடியாதவர்களாக உள்ளனர்.

— சோதிடம், லாட்டரி, குடி, ஒருவரை ஒருவர் நம்பாத போக்கு, மிதமிஞ்சிய சுயநலம், தான் மட்டும் முன்னேறி விடலாம் என்ற குருட்டு நம்பிக்கை ஆகியவற்றிற்கு பலியாக்கப்பட்டுள்ளனர்.

— 'டி' குருப் ஆலைகளைத் துவங்காமல் 'ஏ'பி.சி குருப் ஆலைகளை முதலாளிகள் துவங்க ஆலோசனைக் கொடுத்து ஒப்பந்தம் போட்டவர்களே 'தொழிற்சங்க ஜமீன்தார்கள்'தான். ஏ,பி,சி குருப் ஆலைகளில் குறைவான கூலியே கொடுக்கப்படுகிறது. சட்டச்சலுகைகளோ, எவ்வித சமூகப் பாதுகாப்போ தொழிலாளர்களுக்கு இல்லை. இவ்வாலைகளில் அப்ரண்டீஸ், கேசுவல், டெம்ரவரி, காண்ட்ராக்ட் என்ற முறையில் தொழிலாளர்கள் கொடூரமாகச் சுரண்டப்படுகின்றனர்.

— மற்றொருபுறம் ஆலைகளில் உற்பத்தியோடு சம்பந்தப்பட்ட பிரிவுகளான வைண்டிங், ரீலிங், டபுளிங், பேக்சிங் போன்ற பிரிவுகளை

ஆலைகளுக்கு வெளியே வைத்து இயக்குகின்றனர். அங்கும் மேற்கண்ட முறையிலேயே தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி சுரண்டுகின்றனர்.

— மெக்கானிக் ஷாப், பவர் ஹவுஸ், மோட்டார் ரீவைண்டிங் போன்ற பிரிவு வேலைகளையும் வெளியே காண்டிராக்ட்டுக்கு கொடுத்துவிட்டனர்.

— காட் ஒப்பந்தபடி ஆலைகளில் காலி இடங்கள் ஏற்பட்டால் புதிய தொழிலாளர்களை வேலைக்கு எடுக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு அமுலாக் கப்படுகிறது. இதனால் காலி இடங்களுக்கு புதிதாக ஆட்கள் எடுப்பது இல்லை. அப்படியே எடுத்தாலும் கேசுவல் தொழிலாளர்களாக எடுக்கப்படு கின்றனர். பல மில்களில் நிரந்தரத் தொழிலாளர்களைக் காட்டிலும் கேசுவல் தொழிலாளர்களே அதிகம் உள்ளனர்.

— தொழிலாளியின் சம்பளம், போனஸ் மருத்துவச் செலவு என ஒவ்வொன்றுக்கும் அதிகபட்ச வரம்பு இருக்கிறது. ஆனால் முதலாளி மற்றும் அதிகாரிகள் அடிக்கும் கொள்ளைக்கு வரம்பு இல்லை. என்டிசியில் சேர்மன் மற்றும் அதிகாரிகளின் சம்பளம் மற்றும் பிற சலுகைகளுக்கு வரம்பே கிடையாது.

— தொழிலாளர்களை, குறிப்பாக பெண் தொழிலாளர்களை மில்லுக் குள் அழைத்துவந்து கொத்தடிமைகளாக நடத்துகின்றனர். இக் கொடுமை பல தனியார்மில்களில் நடந்து வருகின்றது.

— நவீனப்படுத்துதல், தொழில் நெருக்கடி, சிக்கனம் என்ற முகாந்திரங் களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி வெளியே தள்ளப்படுகின்றனர். சம்பளஉயர்வு, போனஸ் போன்ற வழக்கமான கோரிக்கைகளுக்கு தொழிலாளர்கள் போராடினால், மில்லை மூடி தொழிலா ளர்களை பழிவாங்கும் அதிரடி நடவடிக்கைகளை முதலாளிகள் (சங்கத்தின் பலத்துடன்) மேற்கொள்ளுகின்றனர். பஞ்சாலை நடக்காவிட்டால் முதலாளி களுக்கு பாதிப்பு ஒன்றுமில்லை. ஏனென்றால் பஞ்சாலையை மூடி விட்டு (புதிய தொழில்களுக்கு) மூலதனத்தை எடுத்துக் கொண்டு ஓடவே முதலாளிகள் தயாராக இருக்கிறார்கள். பெரும்பாலான தொழிற்சங்கத் தலைவர்களும் முதலாளியின் கைக் கூலியாக இருப்பதால் முதலாளிகளை எதிர்த்துப் போராட முடியவில்லை. மேலும் வாழ்க்கை நெருக்கடியை சமாளிக்க முடியாமல் தொழிலாளர்கள் மாட்டிக் கொண்டு விழிக்கிறார்கள். இத்துயரங்களுடன்தான் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள்.

பெற்றக் குழந்தையின் கை, காலை ஒடித்தோ முடமாக்கியோ, கண்களைக் குருடாக்கியோ, பிச்சை எடுக்க வைத்து பிழைப்பு நடத்தும் சில பயவர்கள் உண்டு. அந்தக் குழந்தையின் நிலையில் தான் இன்றைய

பஞ்சாலைத் தொழிலாளர்களையும் தொழிற்சங்க சுல்தான்கள் வைத்துள்ள னர்.

## தொழிற்சங்க புரோக்கர்கள்

பஞ்சாலை நெருக்கடியால் இலட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதற்கும், ஆயிரக்கணக்கானத் தொழிலாளர்கள் வெளியேற்றப் படுவதற்கும், கூலித் தொழிலாளர்களாக சுரண்டப்படுவதற்கும் ஒரு முக்கிய காரணம் தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற போர்வையில் நடமாடும் முதலாளிகளின் எடுபிடிகள் தான்!

என்.எல்.ஓ., ஐ.என்.டி.யூ.சி., எச்.எம்.எஸ்., எம்.எல்.எஃப்., எல்.பி.எஃப்., ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யூ. என பல்வேறு பெயர்களில் இவர்கள் செயல்பட்டாலும் நடைமுறையில் முதலாளிகளுக்கு கங்காணி வேலை பார்ப்பதுதான். தேசியம் பேசினாலும் சரி, திராவிடம் பேசினாலும் சரி, முற்போக்கு என முழங்கினாலும் சரி, இவர்கள் எல்லோரும் தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்து பிழைப்புநடத்துபவர்களே. இவர்க ளின் அடிப்படை நோக்கம் சுகமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வது தான். இப்படி ஈனத்தனமான முறையில் சுகத்தை அனுபவிப்பதற்கும் கொஞ்சம்கூட வெட்கப்படுவதில்லை. மானம் - ரோஷம் இல்லாமல் இருப்பதையே தலைவர்களுக்கான தகுதியாக மாற்றி விட்டார்கள்.

மேற்படியான தொழிற்சங்க புரோக்கர்கள், மில்களில் கம்பெனிகளில் ஒப்பந்தம் போடும் முறையே ரொம்ப அலாதியானது. எப்படி எனில் உதாரணமாக தறிப்பகுதியில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி 75% (திறமை) எபிஸியென்ஸி 8 மணி நேரத்தில் எடுக்க வேண்டும். ஆனால், அவர் வழக்கம்போல் இயல்பான சுறுசுறுப்பில் வேலை செய்து ஆறு மணி நேரத்திலேயே நிர்ணயித்த எபிஸியென்ஸியை எடுத்து விடுவார். மீதம் உள்ள இரண்டு மணி நேரத்தில் ஓய்வு எடுப்பார். அல்லது இன்சென்டிங் பெற கூடுதல் வேலை செய்வார்.

இப்படி தொழிலாளர்கள் கூடுதலாக உழைப்பதையே காரணமாக்கி அடுத்த ஒப்பந்தத்தில் கூடுதல் எபிஸியென்ஸி எடுக்க வைப்பார்கள். இதே நடைமுறை தான் ஸ்பின்னிங் கோன்வைண்டிங், போன்ற எல்லா பகுதிகளி லும் கடைபிடிக்கப்படுகிறது. இப்படி பல ஒப்பந்தங்கள் போட்டதின் விளைவாக எட்டு மணி நேரம் ஓய்வே இல்லாமல் வேலை செய்தும் கூட நிர்ணயித்த எபிஸியென்ஸியை தொழிலாளர்கள் எடுக்க முடியாமல் சம்பளம் வெட்டப்படுகிறது. மேலும் மேலும் சுமத்தப்படும் வேலைப்

பளுவால் 26 நாட்களும் இடுப்பொடிய வேலை செய்ய வேண்டியதிருக்கிறது. இதனால் தொடர்ந்து வேலைக்கு போக முடியாத நிலைமை ஏற்படுகிறது. இம்மாதிரியாக ஒப்பந்தம் போட்டு தொழிலாளர்களைக் காட்டி கொடுக்கும் கிளைச் சங்கத் தலைவர்களுக்கு வருடம் முழுவதும் ஆன்டூட்டி, மிகப் பெரிய ஓட்டல்களில் பேச்சு வார்த்தை, வகை வகையான சாப்பாடும் வழங்கப்படுகிறது. ஆலைக்குள் கெண்டை வண்டி வேலை, பகல் வேலை, கோன் பேக்கிங் வேலை போன்ற சலுகைகள் முதலாளிகளாலும், நிர்வாகத்தாலும் சங்க தலைவர்களுக்கு தரப்படுகிறது. இதற்கு ஒரு நல்ல உதாரணமாக விளங்குவது கோவை சத்திரோடு இராமகிருஷ்ணா மில் தொழிற்சங்கம் ஆகும். சமீபத்தில் போட்ட ஒப்பந்தத்திற்கு பரிசாக கிளைத் தலைவர்களுக்கு நிர்வாகம் தங்க மோதிரம் வழங்கியது. இதற்கு ஆறு மாதம் ஆன்டூட்டியும், தினமும் தண்ணி பார்ட்டியும் கொடுத்து ஒப்பந்தம் செய்தார்கள். மேலும் தலைமை தொழிற்சங்கச் சுல்தான்களுக்கும் (தலைவர்களுக்கும்) பங்களா, கார், சூட்கேஸ் நிறைய பணம் என்று மில் முதலாளிகள் வாரி வழங்குகிறார்கள். இதற்கு விசுவாசமாக நிர்வாகத்தையும் - தொழிற்சங்கத் தலைமையையும் எதிர்க்கும் தொழிலாளர்களை தவறாமல் காட்டி கொடுத்து வருகிறார்கள். இதில் அளவும் சன்மானமும் கூடக் குறைய

மூடிய பஞ்சாலைகளைத் திறக்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தும் தொழிலாளர் குடும்பங்கள்:



இருக்கலாம். ஆனால் ஏறக்குறைய அனைத்து மில் தொழிற்சங்கங்களிலும் இதே நடத்தை தான் உள்ளது. இதில் போலிக் கம்யூனிஸ்டான சிஐடியுவினர் ஒப்பந்தத்திற்குண்டான எல்லா பேச்சு வார்த்தைகளிலும் கலந்து கொண்டு, எல்லா சுகபோகங்களையும் அனுபவித்துவிட்டு கடைசியில் ஒப்பந்தம் கையெழுத்தாகும்போது ஆட்சேபனை தெரிவித்துவிட்டு வெளியேறி விடு வார்கள். தொழிலாளர்களை ஏமாற்றுவதில் "குள்ள நரிக்கூட்டம்" கூட இவர்களிடம் தோற்று போகும்.

இன்று எல்லா மில்களிலும் நிரந்தரத் தொழிலாளர்களை விட கூலித் தொழிலாளர்கள் தான் அதிகம் உள்ளனர். 50/- ரூபாய் கூலி கொடுத்து எந்த உரிமையும் இல்லாமல் மிகக் கடுமையாகச் சுரண்டப்படுகின்றனர். இதற்கு காரணமே தொழிற்சங்கச் சுல்தான்கள்தான். முதலாளிகளுக்கு இந்த தந்திரத்தை கற்றுக் கொடுத்தவர்களும் இவர்கள் தான். கோவையில் அனைத்து மில்களிலும் கூலித்தொழிலாளர்கள் உள்ளனர். சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.டி.யூ.சி. போலிகள் உட்பட எந்தவொருச் சங்கமும் கூலித்தொழிலாளர் களை சங்கத்தில் சேர்த்துக் கொள்வது [illegible]லை.

இதில் சிஐடியு, ஏஐடியுசியினர் ஒப்பந்தம் போடும் முறையானது ரொம்பவும் ரசனைக்குரியதாகும். பி.எல்.சுப்பையன், செங்காளியப்பன் போன்றவர்கள் பகிரங்கமாக தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்து முதலா ளிகளுக்கு சேவகம் செய்வார்கள். போலிகள் தொழிலாளர்களை தடவிக் கொடுத்து, கூட்டம் போட்டு போலிக் கம்யூனிசம் பேசி, ரொம்பவும் நாசுக்காக செய்வார்கள். கடைசியில் முடிவு என்னவென்றால் கூடுதல் வேலைப்பளுதான்.

சாதாரணமாக கஸ்தூரி மில் தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம் பித்த என்.எல்.ஓ. செங்காளியப்பன் படிப்படியாக தலைவராக வளர்ந்து இன்று கோடீஸ்வரனாகி விட்டான். பல மில்களுக்கும் பங்களாக்களுக்கும் அதிபதியாக மாறி விட்டான். அதே போல் ஐ.என்.டி.யூ.சி. பி.எல். சுப்பையனும் (லட்சுமி மில் தொழிலாளி) பல கோடிக்கு சொந்தக்காரன் ஆகி விட்டான். மேலும் சு. துரைசாமி என்பவனும் பல கோடியைச் சம்பாதித்து விட்டான். சாதாரண கிளார்க் ஆக வேலை பார்த்த எச்.எம். எஸ். ஏ.சுப்பிரமணி இன்று கோடீஸ்வரன். இவன்களுக்கெல்லாம் எப்படி இவ்வளவு சொத்து வந்தது. தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து அவர்கள் இரத்தத்தை முதலாளியுடன் சேர்ந்து உறிஞ்சியதன் விளைவாக வந்ததுதான் இவ்வளவு சொத்தும். இப்படிப்பட்ட துரோகிகளை எந்தவித தண்டனையும் இல்லாமல் தப்பிக்க, கோவை தொழிலாளி வர்க்கம் அனுமதிக்க முடியுமா? முடியவே முடியாது.

தொழிலாளர்களை முதலாளிகளுக்கு காட்டிக் கொடுப்பதோடு மட்டும் இல்லாமல் அவர்களின் வர்க்க சிந்தனையையும், செயல்பாட்டையும் கூட சீரழித்து விட்டார்கள் இந்த தொழிற்சங்க புரோக்கர்கள். எப்படி எனில் தொழிற்சங்கங்கள் நடத்தும் வருடாந்திர பொதுக் குழுவில் தொழிலாளர்களுக்கு கறி பிரியாணி போட்டு தண்ணி வாங்கித் தருகிறார்கள். தொழிலாளிகள் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டுக் கையெழுத்து போடுவதற்கு. கந்து வட்டிக்கு பணம் தருவதும் இப்புரோக்கர்கள் தான். கந்து வட்டிக்கு பணத்தைக் கொடுத்து, அந்தப் பணத்திலேயே தலைவர்களும் 'தண்ணி' அடிப்பார்கள். தொழிலாளர்களுக்கு பத்துநாட்கள் சொந்தவிடுப்பை (Leave) நிர்வாகத்திடம் இருந்து வாங்கித் தருவதற்கு தலைவன் 'ரேட்' பேசுகிறான். மில்லில் கெண்டை வண்டி பாபின் வண்டி, பகல் வேலை போன்றவைகளுக்கு விலை கூவி விற்பதும் இந்த தலைவர்களே. மகாசபையில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஏதாவது ஒரு பரிசு (டிபன் கேரியர், தோண்டி) கொடுக்கிறான். பல மில்களில் சிஐடியு கிளைச் சங்கத் தலைவர்களே கந்து வட்டிக்காரன்களாக உள்ளனர். இப்படிப்பட்ட கேவலமான முறைகளைக் கையாண்டு தொழிலாளிகளை வர்க்கஉணர்வு பெறாமல் தடுப்பதே இந்த தொழிற்சங்க சுல்தான்கள்தான்.

தொழிலாளர்கள் மத்தியில் தங்களைப் பற்றிய ஒரு பய பீதியையும் உருவாக்கி வைத்துள்ளார்கள். இவன்களுடைய அயோக்கியத்தனத்தை பற்றி அனைத்து தொழிலாளர்களும் அறிந்ததே. இருப்பினும் கோபத்தை அடக்கி அமைதியாக இருக்கக் காரணமே எதிர்த்து பேசினால் ஏதாவது செய்து விடுவான் என்ற பயம் தான்.

தொழிலாளர்களிடம் தொழிற்சங்கத்தலைவர்கள் எவரும் முறையான அரசியல் பேசுவதில்லை. பொதுவாக ஓட்டுப். பொறுக்கும் அரசியல்தான் பேசகிறார்கள்.. கருணாநிதி என்ன செய்தாலும் சரி என்பான் திமுககாரன். வைகோ என்ன செய்தாலும் சரி என்பான் மதிமுக காரன். இதே போல்தான் அதிமுக காரனும். போலிக் கம்யூனிஸ்டுகளான சி.பி.ஐ., சி.பி.எம். கூட இப்படித்தான். தொழிலாளர்களைப் பாதிக்கும் அரசியல் பொருளாதார காரணிகள், அதிலிருந்து விடுபடுவதற்கு செய்ய வேண்டிய கடமைகள் குறித்து வாய் திறக்க மாட்டார்கள். அப்படி யாரேனும் ஒரு தொழிலாளி பேசிவிட்டால் அவரை நக்சலைட் என முத்திரை குத்தி ஒழிப்பதில் சிஐடியுவினர் கை தேர்ந்தவர்கள். ஆனால் இவர்கள் பிஎம்எஸ் உடன் நெருக்கமான இரகசிய உறவு வைத்துக் கொள்ள தயங்குவதில்லை.

பொதுவாக தொழிலாளர்களிடம் இலட்சக்கணக்கில் சந்தா, நன் கொடை வசூலிப்பது, முதலாளியுடன் சுமுக உறவு வைத்துக் கொண்டுக்

கையூட்டுப் பெறுவது, மிகப் பெரிய கட்டிடங்களாக சங்கம் கட்டிக் கொண்டு டெலிபோன், கார் என தலைவர்கள் ஜாலியாக வாழ்கிறார்கள். எல்லாச் சங்கங்களிலும் எல்லாத் தலைவர்களுக்கும் லேட்டஸ்ட் ஆன இரு சக்கர வாகனங்களும் கார்களும் உண்டு. பாலியெஸ்டர் வேட்டி, சட்டைகளுடன் தலைவர்கள் வாகனங்களில் வலம்வரும் அழகே, அழகுதான். போலி கம்யூனிஸ்டுகளும் இப்பொழுது புத்தம் புதிய இரு சக்கர வாகனங்களில் பவனி வந்து தூள் கிளப்புகிறார்கள். மனிதசமூகம் உருவாக்கிய விஞ்ஞானப் பூர்வமான பொருட்களை தொழிற்சங்கத் தலைவர்கள் பயன்படுத்தக் கூடாது என்று நாம் கூறவில்லை. ஆனால் இவ்வளவு வசதிகளையும் வைத்துக் கொண்டு தொழிலாளிவர்க்கத்திற்கு பாடுபடாமல் முதலாளிக்காகப் பாடுபடு கிறார்கள்; சங்கத்திற்கு பாடுபடாமல் சுயநலனுக்காகப் பாடுபடுகிறார்கள். எந்தவித உழைப்பும் இல்லாமல், எந்தவித மூலதனமும் இல்லாமல், முதலாளி போல் வாழ்க்கையை அனுபவிப்பது தொழிற்சங்கத் தலைவர்கள் தான். இதில் விதிவிலக்காக எந்த தொழிற்சங்கத் தலைவர்களையும் காண முடியவில்லை.

## பஞ்சாலை நெருக்கடிக்கு தொழிற்சங்க சுல்தான்கள் வைக்கும் போலித் தீர்வுகள்

பஞ்சாலை நெருக்கடி பற்றி இவர்கள் கூப்பாடு போடுவதும், கூட்டம் போடுவதும், மாநாடு நடத்துவதும், சங்கத்தின் பெயரால் தாங்கள் நடத்தும் சுகபோக வாழ்விற்கு ஆபத்து வந்து விடுமோ என்ற பயத்தில்தான்! இந்த பயத்தில்தான் ஆளாளுக்கொரு தீர்வு சொல்கிறார்கள். இவர்கள் சொல்வது அனைத்தும் தொழிலாளர்களை ஏமாற்றவும், போர்க் குணத்தை மழுங்கடிக் கவும் செய்கின்றப் பித்தலாட்டமே. 1991-ம் ஆண்டில் (பஞ்சாலைகளுக் கான) லைசென்ஸ் முறை ஒழிக்கப்பட்டதே நெருக்கடிக்கு ஒரு காரணம் என்கிறார்கள். இது ஆய்வே இல்லாமல் சொல்லப்பட்டது ஆகும். பழைய முறையில் கட்டுப்படுத்தப்பட்ட லைசென்ஸ் முறை இருந்தாலும் ஆலைக ளுக்கு நெருக்கடி வரும். பஞ்சு பகிர்வில் ஏராளமான சிறு மில்முதலாளிகள் போட்டிக்கு வந்தாலும் பெரிய மில்முதலாளிகளுக்கே பஞ்சைப் பெற கூடுதல் வாய்ப்புகள் உள்ளது. எனவே லைசென்ஸ்முறை ஒழிப்புதான் காரணம் எனச் சொல்வது பித்தலாட்டம் ஆகும்.

இரண்டாவதாக மத்திய மாநில அரசுகள், பஞ்சாலை நிர்வாக பிரதிநிதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் கொண்ட குழு அமைத்து நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும் என எல்லாத் தலைவர்களும்

சொல்கிறார்கள். இது உண்மையிலேயே தொழிலாளர்களை ஏமாற்ற நடத்தும் உச்சக்கட்ட நாடகமாகும். இலாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்ட முதலாளிகள் மற்றும் புதிய பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தும் அரசு பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினால் தொழிலாளர்களுக்கு என்ன தீர்வு கிடைக்கும்? கசாப்புக் கடைக்காரனோடு பேச்சு வார்த்தை நடத்தி ஆட்டுக்கு விடுதலை வாங்கித் தர முடியுமா? முடியவே முடியாது! வேண்டுமானால் முதலாளிகளோடும் அதிகாரிகளோடும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தொழிற்சங்கப் புரோக்கர்களான இவர்களுக்கு கமிசன் கிடைக்கலாம். இதற்காகத் தான் குழு அமையுங்கள் என்று எல்லா தொழிற்சங்க புரோக்கர்களும் ஒரே அலைவரிசையில் அலறுகிறார்கள்.

முதலாளிகளுக்கு கசக்கும் பிரச்சினைகளை பற்றி வாயெடுக்கவே தயங்குகின்றனர். அதாவது பஞ்சாலைகளில் 5 வருடத்திற்கொருமுறை சம்பள ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ள பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். ஏனெனில் கடந்த சம்பள ஒப்பந்தம் 1997 டிசம்பர் மாதத்துடன் முடிவு அடைந்துவிட்டது. ஆனால் இது குறித்து எந்தவொரு தொழிற் சங்கமும் (புதிய சம்பள ஒப்பந்தம் குறித்து) மூச்சு விடாமல் உள்ளது, போலிக் கம்யூனிஸ்டுகளும் அடக்கி வாசிக்கின்றனர்.

இப்படி அடக்கி வாசிப்பதற்கு இவர்கள் கூறும் காரணமோ தொழில் நெருக்கடி இப்படியிருக்கும்பட்சத்தில் சம்பளத்தை உயர்த்தி கேட்க முடியுமா என்ற கேள்வியையும் எழுப்புகிறார்கள். அப்படியென்றால் விலைவாசி உயர்வால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மாற்றுவழிதான் என்ன? இந்த நெருக்கடியை உடைத்தெறிய இதையொட்டி அரசியல் இயக்கங்கள் எடுத்து, தொழிலாளர்களை அணி திரட்டி வீதியில் இறக்கிப் போராட வைப்பதன் மூலம் தான் இயலும். என்ற சிந்தனையே இந்த போலி கம்யூனிஸ்டுகளுக்கும் இதர தொழிற்சங்கங்களுக்கும் இல்லை.

## சமூக மாற்றமே இறுதி தீர்வு

*இன்று எழுந்துள்ள பஞ்சாலைகளின் நெருக்கடிக்கு இதுவரை முன் வைக்கப்பட்ட தீர்வுகள் அனைத்தும் ஆக்கம் கெட்ட தீர்வுகளே! அப்படியென்றால் இதற்கு மாற்று தீர்வுதான் என்ன?*

*பஞ்சாலை நெருக்கடியை மட்டும் தனித்து பார்த்தால் நமக்கு தீர்வு கிடைக்காது. இப்பிரச்சினை நாடு முழுவதும் உள்ள பிரச்சினைகளோடு சம்மந்தப்பட்டிருப்பதால், விரிவான ஒருங்கிணைந்த பார்வையின் மூலமே இதற்கு விடை காணமுடியும்.*

**தொழிலாளர்களது போராட்டமானது சம்பளத்திற்கும், போனசிற்க்கும் மட்டுமல்லாமல், அரசியல் அதிகாரத் திற்காகவும் நாட்டின் விடுதலைக் காகவும் பாட்டாளி வர்க்க அரசியல் வழியில் நடத்திட வேண்டும்.**

1947-ல் நடந்த அதிகார மாற்றத்தைத் தொடர்ந்து நமது நாடு இங்கிலாந்து உட்பட பல்வேறு ஏகாதிபத்தியங்களால் சூறையாடபட்டு வருகிறது. மேலும் மேல்நிலை வல்லரசுகளின் கைப்பாவைகளான உலக வர்த்தகக் கழகம், உலக வங்கி ஐ.எம்.எப் போன்ற நிறுவனங்களின் தேவைக்கேற்ப நமது நாடு இன்று மறுகாலனியாக்கப்பட்டும் வருகிறது. தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்னும் புதிய பொருளாதார கொள்கையை நடைமுறைபடுத்துவதற்கேற்ப அனைத்து ஏற்றுமதி இறக்கு மதி சட்டங்களும் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் யார் வேண்டுமானாலும், எந்த நாட்டுக்காரன் வேண்டுமானாலும் இந்தியா வில் தொழில் தொடங்கலாம். எந்தப் பொருளை வேண்டுமானாலும் இறக்குமதியும் செய்யலாம், ஏற்றுமதியும் செய்யலாம். எந்தக் கட்டுப்பாடும் இல்லை. ரயில்வே, மின்சாரம் தொலைதொடர்பு, சேவைத் துறைகள் அனைத்தும் தனியாருக்கு கொடுப்பதும், நவீனமயமாக்கி இலட்சக்கணக் கான தொழிலாளர்களை வீதிக்கு தள்ளுவதும் நடந்து கொண்டு வருகிறது. பன்னாட்டு தொழிற்க்கழகத்தின் கீழ் நமது நாட்டின் பாரம்பரியத் தொழில்க ளான விவசாயம், நெசவு உள்ளிட்ட அனைத்துத் தொழில்களும் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் மேல்நிலை வல்லரசுகளின் மறுஉற்பத்திகேற்பவும் தேவைக்கேற்பவும் நமது நாட்டு தொழில்கள் மாற்றப்பட்டு கொண்டு வருகின்றன. இதனால் ஏற்றுமதிக்கான உற்பத்தியை செய்வதும் மக்களின் தேவைக்கான உற்பத்தி புறக்கணிக்கப்படுவதும் நடைபெறுகிறது. இம்மாதிரி யான கொள்கைகள் இந்தியா முழுவதும் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் நடைமுறைபடுத்த போலிக் கம்யூனிஸ்டுகளான சிபிஐ, சிபிஎம் உட்பட அனைத்து ஓட்டுப் பொறுக்கி கட்சிகளும் துணை போய் கொண்டிருக்கின் றன.

இந்தக் கண்ணோட்டத்தில்தான் பஞ்சாலை நெருக்கடியை பார்க்க வேண்டியது உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாடு சிக்கியுள்ளபோது தடையற்ற லைசென்ஸ் முறையை ஒழிப்பதோ, பருத்தி விநியோகத்தை முறைப்படுத்துவதோ, பருத்தியின் விளைச்சலை உயர்த்துவதோ நடைமுறையில் சாத்தியமே இல்லை. இவைகளை இந்த அரசாங்கம் நடைமுறைபடுத்தும் என நம்பிக்கை ஊட்டுவதும் தொழிலாளர்களையும் மக்களையும் ஏமாற்றுவதே. இதனை ஓட்டுப் பொறுக்கிகளும், போலிக் கம்யூனிஸ்டுகளும் அறியாதது அல்ல. தெரிந்தே நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகம் செய்கிறார்கள்.

இத்தனை தடைகளையும், நெருக்கடிகளையும் தகர்த்தெறிந்து நமது நாட்டை ஒளிமிக்க பாதையில் நடைபோட வைக்கும் ஆற்றல் மண்ணின் மைந்தர்களான உழைப்பாளிகளுக்கு மட்டுமே உண்டு. நமது நாட்டில் இயற்கைச் செல்வங்கள் ஏராளமாக உள்ளது. வற்றாத ஜீவ நதிகள், எதையும் விளைவிக்கும் நிலவளம், அதற்கான தட்பவெப்ப சூழ்நிலை, இவைகள் யாவற்றையும் விட மனித வளமும் கூடுதலாகவே இருக்கிறது. இப்படிப்பட்ட நிலவளம், நீர்வளம், மனிதவளம் முழுவீச்சோடு செயல்படத் துவங்கினால் நமது நாடு உலகத்துக்கே உணவுப் பொருளை வழங்க முடியும். நமது நாட்டின் அனைத்து நிலங்களையும் உழுபவனுக்குப் பிரித்துக் கொடுத்து, நீர் வசதியை செய்து கொடுத்தால் எல்லோருக்கும் வேலையும் இருக்கும். உற்பத்தியும் பல்கி பெருகும். மக்களின் வாங்கும் சக்தியும் உயரும். மேலும் நூற்றுக்கணக்கான துணைத் தொழில்களும், ஆலைகளும் உருவாக்கப்படும். அதற்கேற்ப வேலை வாய்ப்புகளும் கூடுதலாகும் நெருக்கடியும் தீர்க்கப்பட்டு விடும்.

இப்படிப்பட்ட ஒரு புதிய ஜனநாயக சமுதாயத்தை ஆயுதந்தாங்கிய புரட்சியின் மூலமே உருவாக்க முடியும். அந்த சமுதாயத்தில் தான் பாட்டாளி வர்க்க தலைமையில் அரசியல் அதிகாரம் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். அப்பொழுது தான் பஞ்சாலை நெருக்கடி மட்டுமல்ல, எல்லா நெருக்கடிகளும் ஒழிக்கப்படும். இதனைச் செய்துமுடிக்கும் வல்லமை முறுக்கேறிய கைகளுக்குச் சொந்தமான தொழிலாளர் வர்க்கத்திற்கு உண்டு. எனவே நம்முடைய போராட்டமானது சம்பளத்திற்கும் போனசிற்கும் மட்டுமல்லாமல், அரசியல் அதிகாரத்திற்காகவும் நாட்டின் விடுதலைக்காகவும் பாட்டாளி வர்க்க அரசியலின் வழியில் நடத்தப்பட வேண்டும். சமூகத்தில் ஒடுக்கப்பட்டு வரும் இதர வர்க்கங்களையும் இணைத்துக் கொண்டு தேர்தல் பாதையைப் புறக்கணித்து ஆயுதந்தாங்கிய பாதையில் புதிய ஜனநாயகப் புரட்சியை முடிக்க பாடுபடவேண்டும். இதுவே நிரந்தர தீர்வுக்கான வழியாகும்.

**மத்திய மாநில அரசுகளே!**

* பருத்தி - சிட்டா நூல்களை நியாயமான விலைக்கு வழங்கு!

* பருத்திக்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்!

* பருத்தி உற்பத்தி பாதிக்கப்படும்போது விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கு!

* பஞ்சாலைகள் மூடப்படுவதைத் தடுத்து நிறுத்து!

* கேசுவல், காண்டிராக்ட் தொழிலாளிகளை நிரந்தரமாக்கு! காண்டிராக்ட் முறையை ரத்து செய்!

* ஊழல் புரியும் என்.டி.சி அதிகாரிகள் மீது வழக்கு பதிவு செய்து, சிறையிலடை! கொள்ளையடித்தச் சொத்துக்களை பறிமுதல் செய்!

**தொழிலாளர்களே!**

* பிழைப்புவாத தொழிற்சங்கங்களைப் புறக்கணிப்போம்! புரட்சிகர தொழிற்சங்கமான புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியில் அணி திரள்வோம்!

* புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி திரள்வோம்! பஞ்சாலை நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு காண்போம்!

**பிழைப்புவாத தொழிற்
சங்கங்களைப் புறக்கணிக்கவும்,
பொருளாதாரவாதத்தை
முறியடிக்கவும்,
பாட்டாளி வர்க்க அரசியல்
அதிகாரத்திற்காகவும்,
புதிய ஜனநாயகப் புரட்சியை
நடத்தி முடிக்கவும்,
புரட்சிகர தொழிற்சங்கமான
புதிய ஜனநாயகத் தொழிலாளர்
முன்னணியில் அணி திரள்வோம்!**



SEELAN BOOKS